Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 59

யாழ்ப்பாணம் பங்குனி 27 ஸபர் 13 சனிக்கிழமை (10-4-71)




# வன்முறையால்பிரச்னைகள் தீரா புதிய கஷ்டங்களே ஏற்படும்

## நாசவேலைகளை ஒழித்து கடமையைச்செய்ய உதவுக!

### நாட்டு மக்களுக்கு பிரதமர் வேண்டுகோள்

கோட்டை,சனி

'வன்முறையால் எந்தப் பிரச்னைக்கும் தீர்வுகண்டுவிட முடியாது. வன்முறை மேலும் மேலும பிரச்னைகளை அதிகரிக்கத்தான் உதவும்'

இவ்வாறு பிரதமர் திருமதி ஸிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றிரவு வானொலிமூலம் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையொன்றில் தெரிவித்தார். ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து தமக்கும் தமது அரசாங்கத்துக்கும் ஒத்துழைப்புத் தருமாறு பிரதமர் நாட்டுமக்களைக் கேட்டுக்கொண்டார். நாட்டின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகவும் அவர் உறுதியளித்தார்,

பிரதமர் திருமதி ஸிறிமா தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது!

ஜனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்ட பிரதம மந்திரியென்றமுறையில் நாட்டின் தற்போதைய நிலைவற்றி மக்களுக்கு எடுத்துக் கூறுவது எனது கடமையெனக்கருதுகிறேன்.

காடுகளில் இரகசியமாக இயங்கிய பயங்கர இயக்கத்தினர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும்பேராசையுடன் திடீர்த்தாக்குதல் நடத்தத் தொடங்கினர் பொலிஸ்நிலையங்கள் மீது குண்டுகளாலும் பயங்கர ஆயுதங்களாலும் தாக்குதல் நடத்திய இப் பயங்கரவாதிகள் ஒன்றுமறியாத விசுவாசமுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கொலை செய்யத் துணிந்தனர். பல லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சொத்துக்களையும் நாசம்செய்ய முனைந்தனர்.

பயங்கரவாதிகளை அடக்கி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டதென மக்களுக்கு உறுதியளிக்கும் நிலையிலிருக்கிறேன், இதற்கு விசுவாசமும், வீரமுமுள்ள பொலிசாருக்கும் ஆயுதப்படையினருக்கும் நாடு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது. விசுவாசமும் வீரமும் நிறைந்த பொலிசாருக்கும் ஆயுதப் படையினருக்கும் நானும் எனது அரசாங்கமும் நன்றி கூறுகிறோம். அமைதியை விரும்பும் மக்கள் அனைவரும் பொலிஸாருக்கும் ஆயுதப் படையினருக்கும் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

#### ஜனநாயக பாரம்பரியம்

பத்து மாதங்களுக்கு முன்னர் ஜனநாயக முறையில் எனது அரசாங்கத்தைத் தெரிவுசெய்து பிரதம மந்திரி என்ற உயர்பதவியைத் தந்தீர்கள். எனக்குப்பின் வருபவர்களுக்கும் இந்த முறையிலேயே தெரிவுசெய்யப்படவேண்டும். ஜனநாயகம் பாரம்பரியத்தைக் காப்பாற்றவேண்டியது நமது கடமையாகும். இந்த மரபுகள் பல ஆண்டு காலம் பாதுகாத்துவரப்படுகின்றது இதனைக்காப்பாற்றுவது உங்கள் பொறுப்பாகும். ஆனல் வன்முறையாளர்கள் அரசாங்கத்தை வீழ்ச்சியுறச் செய்து மக்களைக் கொலைசெய்து ஆட்சியைக்கைப் பற்ற முயற்சிசெய்கிருர்கள் இதற்கான பணமும் வசதிகளும் இவர்களுக்கு கிடைத்துள்ளன. இவர்களின் கொடூரமான பரபரப்பூட்டும் நடவடிக்கைகள் முழுநாட்டையுமே அச்சுறுத்தியுள்ளது.

பொலிஸ் நிலையங்களுக்கு குண்டு வீசியும், அரசாங்கச் சொத்துக்களுக்கு நாசம் விளைவித்தும் உணவுப் பொருள் வினியோகத்தைத் தடைசெய்தும் ஒன்றுமறியாத அப்பாவி பொலிஸ் அதிகாரிகளைக் கொலைசெய்தும் இவர்கள் கொடுமைகள் புரிந்துள்ளார்கள், இவர்களை இந்தக்காரியங்களைப் புரியும்படி ஊக்குவிப்பவர்களுக்கு இது உற்சாகமளிப்பதாகவிருக்கலாம்.

என்னை வீழ்த்தவிரும்பினல் அதற்கு நாகரிகமான ஜனநாயகமுறையிருக்கின்றது. ஜனநாயக முறைக்கு மாருன நடவடிக்கைகளை அடக்குவது எனது கடமையாகும். இவர்களை நாட்டுப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் எதிர்த்துப் போர் புரிவோம்.

#### தலைவணங்க முடியாது

எந்த அரசும் பலாத்காரத்துக்கும், காட்டுமிராண்டித்தனத்துக்கும் தலைவணங்க முடியாது, சூழ்ச்சிகளுக்கு மக்களைப் பலியிட்டு ஆட்சியைக் கைப்பற்ற அனுமதிக்க முடியாது இந்த இளைஞர்களுக்காக நான் உண்மையாகவே பச்சாதபப்படுகிறேன் படை வீரர்களைக் கொல்ல முயன்று பெருமளவில் பலியாகிவருகிருர்கள். இந்தக் கொலைகள் மூலம் எந்தப் பிரச்னையையும் தீர்த்துவிட முடியாது. வன்முறைகள் வன்முறைகளுக்குத்தான் வழிவகுக்கும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## நண்பகல் 12-30 மணிக்கு பின் பஸ் சேவை இல்லை

யாழ்ப்பாணம்,சனி

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து இன்று நண்பகல் 12.30 மணிக்குப் பின்னர்,பஸ் சேவை எல்லாம் ரத்துச்செய்யப் பட்டுள்ளதாக இ.போ.ச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன்று காலைமுதல் கண்டி, அநுராதபுரம், மட்டக்களப்பு மற்றும் தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் எல்லாம் ரத்துச்செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாளை பஸ் சேவை பற்றிய விபரம் சொல்லமுடியாமலிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். சகல கிட்டிய இடங்களுக்கும் இன்று நண்பகல் 12.30 மணிக்கு முன்னர் கடைசி பஸ் புறப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## 4 மணிக்கு ஊரடங்கும்

கோட்டை,சனி

ஊரடங்கு உத்தரவு இன்று ஒருமணி நேரம் தளர்த்தப்பட்டிருக்கிறது. இன்று காலை 6 மணியுடன் முடிவடைந்த ஊரடங்கு உத்தரவு இன்று பிற்பகல் 4 மணிக்கு மீண்டும் அமுலுக்கு வரும். கடந்தசிலதினங்களாக பிற்பகல் 3 மணி தொடக்கம் காலை 6 மணி வரை இது அமுலிலிருந்து வந்தது இன்று பிற்பகல் 4மணிதொடக்கம் நாளைக்காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுலிலிருக்கும்.



## திருமண அழைப்பு

நிகழும் சாதாரண ஸ்ரீ பங்குனிமீ 28-ம் நாள் (11-4-71) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.30மணியிலிருந்து 12. 30 மணிவரையில் உள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எமது மகன் திருநிறை செல்வன் சிவஷண்முகம்
எமது மகள் திருநிறை செல்வி மனோகரி

அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் நடைபெற இருக்கும் திருமணத்திற்கு தாங்கள் குடும்ப சகிதமாய் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[தற்போது அமுலில் இருக்கும் அவசரகால நிலைமை காரணமாக தனிப்பட்ட அழைப்பு சகல உறவினர், நண்பர்களுக்கும் வழங்க இயலாமல் இருப்பதையிட்டு வருந்துகின்றோம்.]

செ. இரத்தினசபாபதி (இளைப்பாறிய றெயில்வே அதிகாரி)
திருமதி இரத்தினசபாபதி
73, சிவன்கோவில் மேலை வீதி.
வண்ணார்பண்ணை.

ஆ. வை. தங்கராஜா (இளைப்பாறிய கிராம முன்னேற்ற அதிகாரி,
திருமதி தங்கராஜா
(அதிபர் நவாலி மகாவித்தியாலயம்)
252, யாழ்வீதி, மானிப்பாய்.

3235

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பெரும்பாலும் நாவின் சுவையின்பத்தில் அவாவுடைய மனிதனிடமே காமக் குரோதாதிகளும் குடிகொள்கின்றன. எனவே முதலில் நாவை அடக்கப் பழகிக்கொள்ளவேண்டும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 27ந் திகதி (10-4-71)


## வன்முறையால் தீருமா?

வன்முறைச் செயல்கள் மேலும்மேலும் பிரச்னைகளை உருவாக்குமேயொழிய எந்தப் பிரச்னைக்கும் தீர்வுகாணமாட்டாது என்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நாட்டின் தற்போதைய நிலைமை பற்றி நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் விடுத்த செய்தியில் குறிப்பிட்டிருப்பது சிந்தனைக்குரியது.

தீர்வு காணப்படவேண்டிய பிரச்னைகள் பல இருக்கின்றன. இதைப் பிரதமரே ஒப்புக்கொள்கிறார். ஆனால் நினைத்தவுடனே பிரச்னைகளுக்குத் தீர்வுகண்டுவிடமுடியுமா? இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து பத்து மாதங்கள் தானாகின்றன. பல வருடங்களாக வளர்ந்து வந்த பிரச்னைகளுக்குப் பத்து மாதங்களில் தீர்வு காணமுடியுமென நினைப்பது விவேகமாகாது; மந்திரவாதிகூட அதைச் செய்துவிடமுடியுமா என்பது சந்தேகமே.

பிரச்னைகளையும், அவற்றின் அடிப்படைகளையும் நன்கு ஆராய்ந்து அவற்றுக்கு எந்தவகையில் தீர்வுகாண முடியுமென்பதை அலசி வழிகாண வேண்டுமே தவிரத் திடீர் திடீரென ஒவ்வொரு பிரச்னைக்கும் மனம் போனபோக்கில் தீர்வுகாண முனைந்தால் புதிய பிரச்னைகள்தான் தலைதூக்குமேயொழியபழைய பிரச்னைகள் தீரமாட்டா.

ஆட்சிபீடத்துக்கு வரும் அரசாங்கம் ஐந்து ஆண்டுகள் பதவியிலிருப்பதற்கு எமது அரசியலமைப்பு வகைசெய்கிறது. இந்த ஐந்து ஆண்டுக் காலத்திலும் அந்த அரசாங்கம் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணத் தவறினால் மக்கள் தமது வாக்குரிமையை உபயோகித்து அதை ஆட்சியிலிருந்து அகற்றிப் பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய அரசாங்கத்தை ஆட்சிபீடத்தில் அமர்த்தலாம். ஐந்து வருடங்கள் பொறுத்திருக்க முடியாவிட்டால் ஜனநாயக முறையில் அரசாங்கத்தை ஆட்சிபீடத்திலிருந்து அகற்றுவதற்கு வேறு பல வழிகள் இருக்கின்றன.

இந்த அமைதியான நாகரிகமான வழி முறைகளை விடுத்து. மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் அழிவைத் தேடக்கூடிய வன்முறைச்செயல்களில் ஈடுபடுவது மேலும் மேலும் மக்களுக்குத்தான் அதிக கஷ்டத்தையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தும்.

அரசாங்கச் சொத்துக்கள் மக்களின் சொத்துக்கள்தான். இவைகளை அழிப்பதால் மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள்.

இதை மக்கள் குறிப்பாக இளைஞர்கள் உணர்ந்து தமது ஆற்றலையும் அறிவையும் அழிவுக்குப் பயன்படுத்தாமல் ஆக்கத்துக்குப் பயன்படுத்துவதற்குச் செலவிட்டால் நாட்டின் பிரச்னைகள் பலவற்றுக்கு நல்லமுறையில் விரைவாகத் தீர்வுகாண வழிவகுக்க முடியும்.

அணுகுண்டு வீச்சினால் அழிந்தொழிக்கப்பட்ட ஜப்பான் நாடும், சென்ற யுத்தத்தின்போது நாசமடைந்த ஜெர்மனியும் மிகக் குறுகிய காலத்தில் விவசாயத்திலும் தொழிலிலும் சிறந்த நாடுகளாக விளங்குவதற்கு அந்நாட்டு மக்களின் தேசப்பற்றும் அவர்களின் உழைப்பும் ஊக்கமும் ஆக்கபூர்வமான சிந்தனையும்தான் காரணம். இந்த மனப்பான்மையும் நாட்டு மக்களுக்குக் குறிப்பாக இளைஞர்களுக்கு ஏற்படவேண்டும். இந்நாள் எந்நாளோ?

## கொழும்பிலிருந்து வந்த ரயில்

யாழ்ப்பாணம், சனி

அநுராதபுரத்திலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட புகைவண்டியொன்று நேற்று மாலை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

இந்த வண்டியில் ஏராளமான பிரயாணிகளும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களும் வந்து சேர்ந்தனர்.

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் பிரயாணிகளுக்கு கொடிகாமம் வாசிகளால் இளநீர் கொடுத்து தாக சாந்தி அளிக்கப்பட்டது.

கொடிகாமம் புகையிரத நிலையத்திலிருந்து வடமராட்சி பிரயாணிகள் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று இரவு 10 மணியளவில் டிரக்கொன்றில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

## திக்காகான் பதவியேற்றார்

டாக்கா, ஏப்.10

கிழக்குப் பாகிஸ்தான் கவர்னராக ஜெனரல்திக்காகான் நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டதாக பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

கிழக்குப் பாகிஸ்தான் கலவரத்தில் ஜெனரல் திக்காகான் சுட்டுக் கொல்லப்பட்டதாகச் செய்திகள் கிடைத்ததாக இந்திய வானொலி சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

## புதிய நெசவு நிலையம்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவு சங்க சமாஜத்தின் புதிய நெசவுநிலையம் ஒன்று புதுக்குடியிருப்பில் கூட்டுறவு சிரேஷ்ட ஆணையாளர் திரு. பொன்னுத்துரையினால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

## அரபுநாடுகள் மாநாடு

கெய்ரோ, ஏப்.10

இன்று இங்கு ஆரம்பமாகும் அரபு நாடுகளின் மாநாட்டில் ஜோர்டானில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமைப்பற்றி ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஜோர்டானில் அரசாங்கப்படைகளுக்கும் பாலஸ்தீன கொமாண்டோக்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள மோதல் பற்றியே இந்த மாநாட்டில் அதிகமாக ஆராயப்படவிருப்பதாகக் கூறப்படுகின்றது. சுமார் எட்டு அரபு நாடுகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றன. அநேகமாக தூதுவர்கள் மட்டத்திலேயே இந்த மாநாடு நடைபெறும். ஜோர்டான் அரசாங்கம் இதில் கலந்துகொள்ளமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது ஆனாலும் பின்னர் நடைபெறவிருக்கும் உயர் தலைவர்கள் மாநாட்டில் ஜோர்டான் கலந்துகொள்ளும் என்று மன்னர் ஹுசேன் அறிவித்திருக்கிறார்.

## மேற்கு ஜெர்மன் ஜனாதிபதியை கொல்ல முயற்சி

பொன், ஏப். 10

மேற்கு ஜெர்மன் ஜனாதிபதி டாக்டர் ஹைனமனைக் கொலைசெய்ய முயற்சி நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது

டாக்டர் ஹைனமன் இல்லத்தில் காணப்பட்ட ஒரு நபரை பொலிசார் பிடித்து அவர் மீது கொலை முயற்சி வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளனர். இந்த நபர் பிடிபட்டபொழுது டாக்டர் ஹைனமன் தமது இல்லத்தில் இருக்கவில்லையாம்.

## வன்முறையால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் எத்தனையோ பிரச்னைகள் இருந்து வருகின்றன. இவைகளைத் தீர்ப்பதற்கு நாம் முயன்று வருகிறோம். மக்கள் விரும்பும் மாற்றங்களையும் ஏற்படுத்த முனைந்துவருகிறோம். ஆனால் பயங்கர இயக்கங்களைத் தூண்டுகிறவர்கள் எமக்கு அவகாசம் தருகிறார்களில்லை.

இந்தக் கிளர்ச்சியை ஒடுக்க எம்முடன் ஒத்துழைத்து எமது கடமைகளைச் செய்வதற்கு சந்தர்ப்பம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஒருதாய் என்ற முறையில் நீங்கள் அனுபவிக்கும் துன்பத்தை நான் உணருகிறேன்.

இந்த தீயச் செயல்களை கட்டுப்படுத்த உதவுங்கள். இந்த வாலிபர்கள் எதுசரி எதுபிழையென்பதை உணரும்படி செய்யுங்கள். வன்முறை வன்முறைகளையே ஏற்படுத்தும் என்பதையும் உணரவையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிறிஸ்தவர்களுக்கு முக்கியமான வெள்ளிக்கிழமையான இன்று முழுநாளும் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டிருப்பது குறித்தும் கவலைப்படுகிறேன். வசதிக்குறைவுகளை பொறுத்துக்கொள்வீர்களென்றும் நம்புகிறேன்.

## ஜெருசலத்தில் பெரிய வெள்ளி

ஜெருசலம், ஏப். 10

நேற்று பெரியவெள்ளித் திருநாளையொட்டி ஜெருசலம் நகரில் ஏராளமான யாத்ரீகர்கள் காணப்பட்டனர். எதுவித அசம்பாவிதமுமின்றி பிரார்த்தனைகள் நடைபெற்றன. இந்தத்திருநாளையொட்டி பலத்தபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

# பக்தி இயக்கத்திற்கு வித்திட்ட அம்மையார்

— வித்துவான் க. கணபதிப்பிள்ளை —

[இம்மாதம் 12-ந் திகதி காரைக்கால் அம்மையார் திருநாளாகும்]

கைலைநாயகனால் 'என் அம்மையே' என அழைக்கப் பெற்றவர் பேயார் எனப்படும் காரைக்காலம்மையார். தலையில் நடந்து திருக்கயிலையைத் தரிசித்தவர் அவர். சமயகுரவராகிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டிற்குக் காலால் நடப்பது தவறென எண்ணி அங்குச் செல்லாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மண்ணிலே காரைக்காலம்மையார் போன்ற ஒருவர் தோன்றிலர் என்றால் மிகையன்று. இன்று நாம் பக்தி வழியில் சென்று முத்திநெறி முதல்வனை அடைய வழிகாட்டியவர் அவரே. முதன்முதல் தேவாரத் திருப்பதிகங்களை அருளியவரும் அவரே. அவரின் அடியொற்றியே ஆழ்வார்களும் நாயன்மார்களும் தத்தம் திருப்பாடல்களை அருளிச்செய்தார்கள் என்பது வரலாற்றாசிரியர் முடிபு.

சைவசித்தாந்த அடிப்படைக்கொள்கைகள் அம்மையார் திருப்பாடல்களிலே தெளிவாகவுள. "அருளே உலகெலாம் ஆள்விப்பது" என்பது அம்மையார் திருமொழி. இம்மொழி பின்னர் வந்த திருவருட்பயன் முதலாம் சாத்திரங்களுக்கு அச்சாணியாக அமைந்து சைவத்தின் உயிர்நாடியாக உளது.

இறைவனோடு தோழமை நெறியில் நின்று நகைச்சுவை ததும்ப அம்மையார் அருளிய திருப்பாடல்களைப் பதினொராந் திருமுறையிலே காணலாம். தமிழ்மொழியிலே புதிய இலக்கிய முறைகளைப் புகுத்தி அம்மையார் தோற்றுவித்த பக்தியியக்கம் இன்றும் பீடுநடைபோடுகின்றது. நம் நா பக்திப்பாடல்களை - தேவார திருவாசகங்களைப் பாடுவதற்கு வழிகாட்டியவர், அம்மையாரே. இயலிசை வல்லார் அவர்.

பொலநறுவையில் நால்வர் திருவுருவத்தோடு அம்மையார் திருவுருவமும் கண்டுபிடிக்கப் பெற்றமையும், பதுளையிலும் அம்மையின் திருவுருவம் சமீபத்தில் காணப்பெற்றமையும் ஈழத்திற்கும் அம்மையாருக்குமுள்ள தொடர்பைக் காட்டுவனவாகும்.

## கி. பாக். நிவாரணத்துக்கு பிரான்ஸ் உதவும்

### யாஹ்யாவுக்கு பொம்பிடோ செய்தி

பாரிஸ், ஏப்ரல் 10

கிழக்குப் பாகிஸ்தானில் நிவாரண வேலைகளில் ஈடுபட பிரான்சும் தயாராய் இருக்கிறதென்று பிரஞ்சு அதிபர் பொம்பிடோ பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகானுக்கு அறிவித்திருக்கிறார்.

கிழக்குப் பாகிஸ்தான் விஷயத்தில் பிரான்சின் போக்கு என்னவென்று விசாரித்து ஜெனரல் யாஹ்யாகான் எழுதிய கடிதத்திற்கு அதிபர் பொம்பிடோ பதிலனுப்பியிருக்கிறார். கிழக்குப் பாகிஸ்தானில் நிவாரண வேலைகளுக்கு சர்வதேச உதவிகள் கோரப்படுமானால் பிரான்சும் தனது பங்கைச் செலுத்தத் தயாராய் இருக்கிறதென பொம்பிடோ தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

கிழக்குப் பாகிஸ்தானில் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் ஆதரவாளர்களின் ஆதிக்கத்திலுள்ள நகரங்கள்மீது பாகிஸ்தான் ராணுவவிமானங்கள் பரவலாகக்குண்டுவீசித் தாக்குதல் நடத்திவருவதாக இந்தியத் தலைநகருக்குக்கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. இந்தத் தாக்குதல்களினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகக்கூறப்படுகின்றது.

கொமில்லாவில் பல கிராமங்கள் இன்னமும் தீப்பிடித்து எரிந்துகொண்டிருக்கின்றனவாம்.

இந்தியாவில் பல தலைவர்கள் ஷேக் முஜிபுர் ரஹ்மான் ஆதரவாளர்களின் சுதந்திர அரசாங்கத்தை அங்கீகரிக்கும்படி இந்திய அரசாங்கத்தை வற்புறுத்திவருகிறார்கள்.

கிழக்குப் பாகிஸ்தான் நெருக்கடிபற்றிய கருத்தரங்கொன்றில் முன்னாள் கல்வி அமைச்சர் சாக்ளா பேசுகையில், பாகிஸ்தான் அரசாங்கம் அமைக்கப்பட்டதின் அடிப்படையே தகர்க்கப்பட்டுள்ளது என்றார்.

இந்தக் கருத்தரங்கில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் பேசியபோது, கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள ஷேக் முஜிபுர் ரஹ்மானின் சுதந்திர அரசாங்கத்தை அங்கீகரிக்கவேண்டிய சரியான தருணம் இதுவாகுமென்று வலியுறுத்தினார்

இந்தியாவிலுள்ள 70வழக்கறிஞர்கள் கொண்ட ஓர் இயக்கமும் இவ்வாறே அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளது.

மேற்கு வங்காள முதலமைச்சர் திரு. அஜாய் குமார் முகர்ஜியும் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் கிழக்குப் பாகிஸ்தான் அரசை அங்கீகரிக்கும்படிவற்புறுத்தியிருக்கிறார்.

## 'அரசுக்கு உதவுக'

கோட்டை, வியாழன்

'ஏழை எளிய மக்களால் ஆட்சி பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட, தொழிலாளருக்கும் பொதுமக்களுக்கும் நன்மைசெய்யும் கொள்கைகளைக் கொண்ட இன்றைய அரசாங்கத்துக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பது தொழிலாள வர்க்கத்தினதும் பொதுமக்களினதும் கடமையாகும்' என்று தொழிற்சங்கங்களின் இணைப்புக்குழு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் கேட்டுள்ளது.

தொழிலாளர் சம்மேளனம், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம், ராஜ்ய லிபிகரு சம்மேளனம், அரசாங்க தொழிற்சங்க சம்மேளனம், அரசாங்கசேவைத் தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்கா அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் சம்மேளனம், பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் சம்மேளனம், ஸ்ரீலங்கா தேசிய ஆசிரியர் சம்மேளனம் ஆகியவை கூட்டாக இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கு அளிக்கும் உதவி பற்றி மறு பரிசீலனை

## அமெரிக்கா ஆலோசனை

வாஷிங்டன், ஏப். 10

எதற்காகவோ வழங்கப்பட்ட அமெரிக்க ஆயுதங்களைப் பாகிஸ்தான் அரசாங்கம் கிழக்குப்பாகிஸ்தான் மக்களுக்கெதிராக உபயோகிப்பது குறித்து அமெரிக்க அரசாங்கம் கவலைகொண்டுள்ளது. அமெரிக்காவின் இக்கவலைகுறித்து பாகிஸ்தான் அரசாங்கத்துக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

பாகிஸ்தான் அரசாங்கத்தின் நடவடிக்கைகாரணமாக பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் பொருளாதார உதவி பற்றியும் அமெரிக்கஅரசாங்கம் மறுபரிசீலனை செய்யவிருக்கிறதாம்.

# கிழக்குப்பாகிஸ்தானில் அமைதியேற்பட வழிசெய்க

## அமெரிக்கா கோரிக்கை

நியூயோர்க், ஏப். 10

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டிருக்கும் பயங்கர நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து அங்கு சமாதானத்தை ஏற்படுத்துமாறு அமெரிக்கா, பாகிஸ்தான் அரசைக் கோரியுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

குடியேற்ற ஆதிக்கக்காரருக்கு எதிராகத் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளக் கொடுக்கப்பட்ட ஆயுதங்களை அப்பாவி மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதை அமெரிக்கா கண்டிப்பதாக வொய்ஸ் ஒப் அமெரிக்கச் செய்தி ஒன்று தெரிவித்தது.

# மீண்டும் சேவைக்கு அழைப்பு

கோட்டை, சனி

ஓய்வு பெற்ற சிறைச்சாலை அதிகாரிகள் காவலாளர்கள் ஆகியோர் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். கடந்த பன்னிரண்டு மாதங்களுக்குள் ஓய்வு பெற்ற ஜெயிலர்கள், ஜெயில் கார்டுகள் மற்றும் சிறைச்சாலை மேற்பார்வையாளர்கள் ஆகியோரைச் சேவைக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளது.

......

# வங்காள, உருது செய்திகள்

புதுடில்லி, ஏப். 10

வங்காள மொழியிலும், உருதுமொழியிலும் தினமும் நான்கு நேரம் ஐந்து. பத்து நிமிஷங்களுக்கு விஷேச செய்திகளை ஒலிபரப்புவதற்கு இந்திய வானொலி ஏற்பாடு செய்துள்ளது.

......

# கப்பல்கள் மோதின

லண்டன், ஏப். 10

பிரிட்டிஷ் எண்ணெய்க்கப்பல் ஒன்றுடன் டென்மார்க் கப்பல மோதிக் கொண்டதால் ஆங்கிலக் கால்வாயில் எண்ணெய் மிதந்து கால்வாய் அசுத்தமாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது கரைக்கு வரும் எண்ணெயை அப்புறப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

## தேவை

ஆங்கில தட்டெழுத்துப் பயிற்சியும், ஆங்கில அறிவுமுள்ள இளைஞர் ஒருவர் தேவை. பிணைப்பணம் 2500 ரூபா மாதச் சம்பளம் 150 ரூபா சம்பள உயர்வும் உண்டு. றேடியோஸ்பதி, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# வதந்தியை பரப்பினராம்

## மூவர் கைது

கோட்டை, வெள்ளி

பொய்யானதும், விஷமத்தனமானதுமான வதந்திகளைப்பரப்பினார்கள் என்ற குற்றச்சாட்டின்மீது இன்று கொழும்பு நகரில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் தொலைபேசியில் விடாமுயற்சியாக வதந்தியை பரப்புவதில் ஈடுபட்டிருந்தாராம். மூவரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்; இவர்கள் விசாரணை செய்யப்படுவர்.

## அறிவித்தல்

வலிகாமம் வடக்குப்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தெல்லிப்பளை மொத்த நிலையத்தில்,

1. 3000க்கு மேற்பட்ட சாக்குகளும்,
2. பழுதடைந்த மின் விசிறிகளும்,
3. பழுதடைந்த றேடியோவும்,
4. கழிவு சீனியும்,

வேறும்பல பொருள்களும் கேள்விப்பத்திரமூலம் விற்கப்படும்.

ரூபா 50/- சமாசத்தின் சுன்னாக மொத்த நிலயத்திலுள்ள அலுவலகத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

15-4-71க்குமுன் கேள்விப் பத்திரங்களைச் சமாசத்தில் ஒப்படைக்கவேண்டும்.

இங்ஙனம்,
கூட்டுறவுச் சேவையிலுள்ள
க. இராமச்சந்திரன்
நிர்வாகக் காரியதரிசி
3240


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



ராஜா (யாழ்ப்பாணம்) காலை 10மணிக்கு மட்டும்
ஜெய்சங்கர் - விஜயலெட்சுமி
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
உயிர் மேல் ஆசை

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி காலை10-00
சிவாஜி கணேஷன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் [யாழ்ப்பாணம்] தினசரி காலை 10-30 மட்டும்
மாஸ்ரர் பிரபாகர்
பேபி சுமதி - லெட்சுமி
நடித்த
வா ராஜா வா

2-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
மனோகர், அசோகன், ஆனந்தன்
நாகேஷ், சுந்தரராஜன்
நடித்த
விநாயகா பிக்சர்ஸ்
மூன்றெழுத்து
(வர்மச்சித்திரம்)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 9-30, மட்டும்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
நடித்த
சாரதா

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 9-30, மட்டும்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
அன்பளிப்பு

வெல்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 10-30, மட்டும்
ஜெய்சங்கர் - விஜயகுமாரி
நடித்த
குழந்தையும் தெய்வமும்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30am only
Spell Bindiug Suspence
Thriller
BANDITS in ROME
[அவசரகாலநிலையைமுன்னிட்டு "லக்ஷ்மிகல்யாணம்" காண்பிக்க முடியவில்லை]

REGAL - Jaffna
Daily- 9- 30 a.m. Only
Birth Rynolds
in
NAVAJO JOE

SONY®
2R-29


ஸோனி பாக்கெட் ட்ரான்ஸிஸ்டர் ரேடியோ
சீடில்ஸ் சினிரேடியோ
9, 10, கொன்ஸிஸ்டரி கட்டிடம,
பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
தொலைபேசி 27311
கிளைகள் : கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, அம்பலாந்தோட்டை, பம்பலப்பிட்டி

விற்பனையாகின்றது
ஈழநாடு
10-வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்திய சிறுகதை, ஓரங்க நாடகப் போட்டிகளில் பரிசு பெற்றவை நூலுருவில் வெளிவந்துள்ளன.
கங்குமட்டை
(சிறுகதைத் தொகுதி)
செங்கை ஆழியன் எழுதிய — கங்குமட்டை
செம்பியன் செல்வன் எழுதிய—பூவும் கனியும்
அப்பச்சி மகாலிங்கம் எழுதிய ஆறுதற்பரிசு
எம். ஏ. ரஹ்மான் எழுதிய —சிறுகை நீட்டி
மு கனகராசன் எழுதிய—சுண்டுவிரல் மெட்டி
தொகுதி 1: விலை ரூபா ஒன்று
விடிய இன்னும் நேரமிருக்கு
(ஓரங்க நாடகங்கள்)
செம்பியன் செல்வன் எழுதிய
விடிய இன்னும் நேரமிருக்கு
'யாழினி' எழுதிய தாஜ்மகால்
உடுவை தில்லைநடராசா எழுதிய — பூமணர்
மு. கனகராசன் எழுதிய
சிலுவையும் குத்துவாளும்
தொகுதி: 1 விலை ரூபா ஒன்று
கிடைக்குமிடங்கள்: ச கிருஷ்ணசாமி, பெரியகடை
யாழ்பபாணம்
ரகுநாதன் பதிபகம்
இல: 303, காலி வீதி, கொள்ளுப்பிட்டி
கொழும்பு—3
'ஈழநாடு'
த. பெ. எண் 49 — யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு விநியோகம், விற்பனை இலாகா அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம்

கோட்டை, சனி

உணவு விநியோக நடவடிக்கைகள் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. உணவுப்பொருள் விநியோகத்தில் எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில் உணவுப்பொருள் பண்டகசாலைகள் 24 மணி நேரமும் திறந்து வைத்திருக்கப்படவேண்டுமென்றும் உணவுப் பொருள் விநியோகம் சம்பந்தமாக மாகாண உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும் தகுந்த ஒழுங்குகள் செய்து கொள்ளவேண்டுமென்றும் தடையில்லாத வகையில் உணவுப்பொருள் விநியோகத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

### கூட்டுறவுக் கடைகள்

கூட்டுறவுச் சங்கக் கடைகள் இன்றுகாலை முதல் நண்பகல்வரை திறந்திருக்கும். 5-ந் திகதி முதல் 18ந் திகதி வரையிலான இருவார பங்கீட்டரிசியையும் இக்கடைகளில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

### விற்பனவு இலாகா

விற்பனவு இலாகா அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. விற்பனவு இலாகா ஊழியர்களின் லீவுகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. லீவில் சென்றுள்ள ஊழியர்கள் யாவரும் இம்மாதம் 10ந் திகதி சனிக்கிழமை காலை தங்கள் தங்கள் இலாகாக்களுக்குச் செல்லவேண்டுமென்று விற்பனவுத் திணைக்கள ஆணையாளர் கேட்டுள்ளார்.

## பொதுமக்களுக்குப் பொலிசார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம். சனி

அவசரகால ஊரடங்குச் சட்டங்களுக்கு மதிப்புக் கொடுத்து வீதிகளில் அனாவசியமாகத் திரியாது பொலிசாரும் இராணுவத்தினரும் அவர்களது கடமைகளைச் செய்வதற்கு ஒத்துழைப்புக் கொடுத்து நிலைமை சீரடையும்வரை பொதுமக்கள் ஒத்துழைக்குமாறு வடபகுதிப் பொலிசார் கேட்டுள்ளனர்.

மக்கள் பொய்வதந்திகளை பரப்பவேண்டாமென்றும் பொய்வதந்திகளைப் பரப்புபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏதாவது அசம்பாவிதங்களோ அல்லது சந்தேகத்திற்கு இடம்தரும்வகையில் வெளியூரவர்கள் யாரும் அயல் வீடுகளில் நடமாடுவதைக் கண்டாலோ அதை உடனடியாகப் பொலிசாருக்கு அறிவிக்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘நேதாஜி மாண்டது உண்மையே’

## ஓய்வு பெற்ற ஜெனரல் கூறுகிறார்

புதுடில்லி, ஏப். 10

நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் விமானவிபத்தில் மாண்டது உண்மை என்று ஓய்வு பெற்ற ஜப்பானிய ஜெனரல் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேதாஜியின் மரணம் உண்மைதானா வென்பது பற்றி விசாரணை செய்து வரும் கோஸ்லா கமிஷன் முன் சாட்சியமளிக்கையிலேயே இந்த ஓய்வுபெற்ற ஜப்பானிய ஜெனரல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேதாஜி பிரயாணம் செய்த விமானத்தில் தாமும் பிரயாணம் செய்ததாகவும் அந்த விமானம் விபத்துக்குள்ளாகி வீழ்ந்தபோது காயமடைந்த நேதாஜி தம்முடன் பேசுகையில் ஜப்பான் மன்னருக்குத் தமது நன்றியையும் மரியாதையையும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பின்னர் ஆஸ்பத்திரியில் தாமும் நேதாஜியும் அனுமதிக்கப்பட்டதாகவும் அன்றிரவு 11 மணியளவில் நேதாஜி இறந்து விட்டதாகத் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் அந்த ஜெனரல் கூறினார்.

## 25 ரூபா அபராதம்

வல்வெட்டித்துறை. சனி

பொதுச்சந்தையில் குடித்துவிட்டு நின்று குழப்பஞ் செய்ததாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் மு. மயில்வாகனம் என்பவருக்குப் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஜே. ஜி. ஆசிர்வாதம் ரூபா 25 அபராதம்விதித்துள்ளார்.

.........

## தேஜோவை ஒப்படைக்க முடிவு

புதுடில்லி. ஏப். 10

பத்துலட்சம் பவுண்மோசடி சம்பந்தமாக இந்திய அரசாங்கம் தேடிவந்த இந்திய ஜெயந்தி கப்பல் கம்பனி உரிமையாளரான தர்மதேஜாவை இந்திய அரசிடம் ஒப்படைப்பதென பிரிட்டிஷ் அரசாங்கம் இறுதியாக முடிவு செய்துள்ளது.

எப்பொழுது அவரை இந்திய அரசிடம் ஒப்படைப்பதென்பது பற்றி இந்திய உள்துறை அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி முடிவு செய்யப்படுமாம்.

.........

## பொங்கல் விழா

சுழிபுரம், சனி

சுழிபுரம் காளுவன் வயிரவ கோவிலில் பொங்கல் விழா நடைபெற்றது. பதிநெறிச் சபையினரின் சமயச் சொற்பொழிவுகளும் பஜனையும் விழாவில் இடம் பெற்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பல்கலைக்கழக மாணவர் பாதுகாப்பாக உள்ளனர்

கோட்டை, வெள்ளி

பேராதனைப்பல்கலைக்கழகத்திலிருந்து ஊரடங்கு உத்தரவு காரணமாகத் தங்கள் வீடுகளுக்குத் திரும்பமுடியாதிருந்த மாணவர்கள் கொழும்புவந்துள்ளதாகவும் அவர்கள் சுகமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கிறார்களென்றும் அறிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் குறிப்பாக வடபகுதி மாணவர்கள் செஞ்சிலுவைச்சங்கம், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தங்கும் ‘சிராவஸ்தி’ ஆகிய இடங்களிலும் மற்றும் தனியார் இல்லங்களிலும் தங்கியிருக்கிறார்களென அறிவிக்கப்பட்டது.

— —

## பெ. ஆ. சங்க நிர்வாகிகள்

வல்வெட்டித்துறை, சனி

பொலிகண்டி சைவவித்தியாசாலைப் பெற்றோர்-ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் அதன் தலைவர் திரு. வே. கணேசன் தலைமையில்நடைபெற்றபோது. பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். காப்பாளர்கள் வே நடராசா பெ. அருணாசலம் ச. சின்னையா சி. கணபதிப்பிள்ளை தலைவர்: வே. கணேசன் உபதலைவர்கள். வ. காசிநாதன் செ. கந்தசாமி செயலாளர்: பகுதிக் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து பொருளாளர்: திருமதி: சி. பரராசசிங்கம் மற்றும் செயற்கு அங்கத்தவர்களாக பத்து பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

.........

## வெடிகள் கொளுத்த தடை!

கோட்டை, சனி

வெடிகள், வாணங்கள் கொளுத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எந்த விழாவிலும் வெடிகள், வாணங்கள் கொளுத்தாமல் ஒத்துழைக்கும்படி பொதுமக்களை அரசாங்கம் ஓர் அறிக்கை மூலம் கேட்டுள்ளது.

## தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொக்குவில் மேற்கு ஸ்ரீ தமிழ் கலவன் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பாடசாலைக்குஒரு நிரந்தர கட்டிடம் கிணறு தளபாடங்கள் ஆதியன அரசாங்கத்திடம் பெற்றுத் தருமாறு நல்லூர்த் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினரைக் கேட்டுக் கொள்வதென்று தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## கந்தபுராண உரை நூல்

சுழிபுரம், சனி

சுழிபுரம் யோகி கா. கார்த்திகேசு எழுதிய கந்தபுராண யுத்தகாண்ட உரைநூல் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை இந்து மாமன்றத்தினரால் வெளியிடப்படவிருக்கிறது. இந்நூல் வைகாசி விசாக தினத்தன்று பருளாய் சிவசுப்பிரமணிய சுவாமி தேர்த்திருவிழாவின்போது வெளியிடப்படும்.

.........

## நாளை விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மேயர் திரு ரி. எஸ். துரைராசா மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உறுதிப்படுத்தும் விசேஷ கூட்டம் நாளை காலை 10-30 மணிக்கு மாநகரசபை ஆணையாளர் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## கொழும்பு - யாழ் விமான சேவை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் இன்று விமான சேவைகள் நடைபெறவிருக்கின்றன. விமானப்பிரயாண நேரம் பற்றிச் சரியாக இப்போது சொல்வதற்கில்லையென ஏர்சிலோன் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வந்தபின்னர் விமான நிலையத்தில் வந்திறங்கும் பிரயாணிகள் விமான நிலையத்திலேயே தங்கியிருந்து ஊரடங்கு உத்தரவு நீங்கிய பின்னரே தமது இடங்களுக்குச் செல்லமுடியுமென்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு கொழும்பு மூலமே விமானசேவை நடைபெறும்.

.........

## கந்தபுராண விரிவுரை

சுழிபுரம், சனி

‘கந்தன் புகழ் பாடும் ஓர் அரிய நூல் கந்தபுராணமாகும். அழகுக்கு முருகன், அறிவுக்கு முருகன். ஏன் எமது வாழ்வுக்கு வழிகாட்டுபவனே முருகன். முருகன் பெருமையையும் புகழையும் நாளும் பொழுதும் பரப்பும் அடியவர் பெருமையை நாம் எண்ணும் போதும் நினைக்கும்போதும் என்றும் மறவாத பேரின்பம் கிட்டுகிறது.’

இவ்வாறு பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் நடைபெற்ற கந்தபுராணத் தொடர் இறுதிநாள் விரிவுரையில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

.........

## ‘ஈழகேசரி’ பொன்னையா நினைவுவிழா

யாழ்ப்பாணம், சனி

குரும்பசிட்டி சன்மார்க்க சபை இன்று சனிக்கிழமை கொண்டாடவிருந்த ‘ஈழகேசரி’ பொன்னையா நினைவு விழா அவசரகால நிலைமை ஊரடங்குச் சட்டத்தையொட்டி இன்னொரு தினத்தில் கொண்டாடப்படவிருக்கிறது. நிலைமை சீரானதும் விழாத்தேதி நிர்ணயிக்கப்படுமென்றும். ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சிகள் யாவும் விழா நடக்கும்போது நடைபெறுமென்றும் சன்மார்க்கசபைஇணைக் காரியதரிசிகளான திரு ஏ. வி. பொன்னுத்துரை, திரு. த. செல்லையா ஆகியோர் அறிவிக்கின்றனர்.

## பாராட்டுவிழா

சுழிபுரம், சனி

சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலைத் தலைமையாசிரியராக இருந்து ஓய்வுபெற்ற பிரமஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மாவின் சேவை நலம் பாராட்டுவிழாவை முன் குறிப்பிட்ட திகதியலன்றிப் பிறிதொரு தினத்தில் நடத்துவதென விழாச்சபை தீர்மானித்துள்ளது.

.........

## வேண்டுகோள்

கோட்டை, வியாழன்

சர்வாதிகார பாசிச முறைக்கலகக்காரரை அடக்கி மக்களால் தெரிவு செய்யப்பட்ட உண்மையான சுதந்திர மக்கள் அரசாங்கம் உண்மையான சோஸலிஸ சுதந்திரத்தை நிறைவேற்றுவதற்கு மக்கள் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும் என்று தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரும், வீடமைப்பு கட்டட நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர்கெனமனும் வானொலி மூலம் நேற்று நாட்டுமக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் கேட்டுக் கொண்டனர்.

திரு. குமாரசூரியர் தமிழ்த் தேசிய சேவையில் தமிழிலும் திரு பீட்டர் கெனமன் ஆங்கில தேசியசேவையில் ஆங்கிலத்திலும் உரைநிகழ்த்தினர்.

“நாட்டில் கிளர்ச்சியை உண்டாக்கி. நாசகாரவேலையிலீடுபட்டிருக்கும் இயக்கத்தை அடக்கி, சுதந்திர சோஷலிஷ ஆட்சியைப் பலப்படுத்த நாட்டுமக்கள் உதவவேண்டும்”.

இவ்வாறு தபால் தந்தி அமைச்சர் செனட்டர் திரு. செல்லையா குமாரசூரியர் இன்று பொதுமக்களுக்கு வானொலிமூலம் விடுத்துள்ள வேண்டுகோளில் கேட்டுள்ளார்.

.........

## பஸ்—கார மோதல்

யாழ்ப்பாணம், சனி

யழ்ப்பாணம் பிரதான வீதியில் பஸ் ஒன்றும் காரும் மோதியதால் காருக்கு சேதமேற்பட்டது இதனால் சில மணிநேரம் போக்குவரத்து தடைபட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org